# ஆந்திராவும் இந்திராவும்!

## தலைவர் கலைஞர்



# ஆந்திராவும் இந்திராவும்!

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

திரு. பா. ஜான்,
(வசந்தம் கார்டன்,
மகாகவி பாரதிநகர்; சென்னை)
அவர்களின் அன்பளிப்பு

வெளியீடு :

திராவிட முன்னேற்றக் கழகம்

''அறிவகம்''

இராயபுரம் : சென்னை-600 013.

முதற்பதிப்பு : செப்டம்பர் 1984

14051

விலை ரூ. 1-00

அச்சிட்டோர் :

தமிழோசை அச்சகம், 84, அபிபுல்லா சாலை,
தியாகராயநகர், சென்னை—600 017.

## இந்நூல்...

ஆந்திராவில் என். டி. ராமராவ் ஆட்சி கலைக்கப் பட்டதையொட்டி தலைவர் கலைஞர் அவர்கள் 'முரசொலி' இதழில் எழுதிய கடிதங்களின் தொகுப்பு நூல் இது !

கழகத் தோழர்கள் படிப்பது மட்டுமின்றி, இதிலுள்ள கருத்துக்களை பரப்பவும் வேண்டப் படுகிறார்கள் .

தலைமைக்கழகம் (தி.மு.க.)

‘‘......பாஸ்கர ராவ் என்ற துரோகி; தன்னிடம் தொண்ணூறு சட்ட மன்ற உறுப்பினர் இருப்பதாகவும்–இந்திரா காங்கிரசும் தனக்கு ஆதரவு தருவதாகவும்—எனவே, தன்னை முதலமைச்சராக அறிவிக்க வேண்டுமென்றும் கூறியபோது ‘‘சட்டசபையில் யாருக்குப் பெரும் பான்மை என்பதை சோதித்துப் பாருங்கள்” என்று முறையிட்ட என். டி. ராமராவ் அவர்களை; அவர் இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டு வந்தவர் என்றும் பாராமல்–போலீஸ் லாரியில் தூக்கிப் போட்டுக் கைது செய்து அழைத்துச் செல்ல ஆணையிட்ட கவர்னர் ராம்லால்; தன்னிசையாகத்தான் செயல்பட்டார் என்று யாராவது சொன்னால், அப்படிச் சொல்கிறவர்களின் மனச் சாட்சியைச் சந்தேகப்படத்தானே வேண்டும்!......

......என்ன தான் வாய்ஜாலம் செய்து தங்களின் நடவடிக்கைகளுக் குச் சமாதானம் தேட முயன்றாலும்; உலகம் அவர்களைச் சரியாக அடையாளம் கண்டு கொண்டிருக்கிறது என்பதை மட்டும் மறைத்து விட இயலாது! காலம் கடந்த ஞானோதயத்தினால் களங்கத்தை கழுவிக் கொள்ள முடியாது......!’’

தலைவர் கலைஞர்.

# ஆந்திராவும் இந்திராவும்!

## கவர்னர் தேவை இல்லை;
## கம்ப்யூட்டர் போதும்!

போர
ஆய்
நி
சென்

உடன்பிறப்பே,

கத்தியினால் நெஞ்சாங்குழியில் குத்தி; ஜனநாயகத்தைக் கொலை செய்தது ''எமர்ஜன்சி'' முறை!

கழுத்தை நெரித்துக் கொலை செய்து விட்டு ஒரு கயிற்றில் தொங்க விட்டுத் தூக்கு மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக ஜனநாயகத்தைப் பாடையில் ஏற்றி பள்ளத்தில் புதைப்பது இந்திரா காங்கிரஸ் கடைப்பிடிக்கும் இப்போதைய மாற்றுமுறை! அதாவது ''எமர்ஜன்சி'' என்று தெரியாமல், நடைமுறையில் ''எமர்ஜன்சி''யை மறைமுகமாகப் பயன்படுத்துவது!

பாண்டிச்சேரியில் தி.மு.க. ஆட்சிக்குப் பெரும்பான்மை இல்லை—அதனால் சட்டசபை கலைக்கப்படுகிறது எனப் பொய் கூறிக் கவர்னர் ஆட்சியைப் பிரகடனப் படுத்திய சர்வாதிகாரக் குருதி தோய்ந்த கைகள்தான் காஷ்மீரில் பரூக் அப்துல்லாவின் ஆட்சிக்குப் பெரும்பான்மை இல்லை எனக்கூறி, அங்கே கிடைத்தஎட்டப்பன் ''ஷா'' என்பவருக்கு இருபத்துஆறு காங்கிரஸ் எம்.எல்.ஏக்களை முட்டுக் கொடுக்கச் செய்து, பருக்கின் ஆட்சியைக் கவிழ்த்தன என்ற ஜனநாயகப் படுகொலை வரலாற்றின்

வரிகள்; நமது கண்களுக்கு முன்னுல் மின்னிக் கொண்டிருக்கும்போதே; "குலு" என்ற "குளுகுளுப்" பிரதேசத்தில் "எதிர்க்கட்சி ஆட்சி நடக்கும் மாநில அரசுகளைக் கவிழ்க்கமாட்டோம்" என்று பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள் அறிவித்தார்கள்.

பிரதமர் அவ்வாறு அறிவித்தபோது "இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா?" என்ற சொற்றொடர் தான் என் நினைவுக்கு வருகிறது என நான் குறிப்பிட்டிருந்தேன்.

இதோ; ஆந்திரத்தில் பத்திரமாக உறியிலிருந்த பாலைக் கீழே தள்ளி—கிண்ணத்தைக் கவிழ்த்து—தரையிலோடும் பாலைத் தணியாத தாகத்துடன் பூனை குடிக்கிற காட்சியைக் காண முடிகிறது!

"அந்தந்த மாநில அரசுகளில் எழும் பிரச்சினைகளால் அவைகள்; தாங்களாகவே கவிழ்ந்து விடுவதற்கு நாங்கள் பொறுப்பல்ல!"

இப்படியும் "குலு" நிகழ்ச்சியில் பிரதமர் பேசியிருந்தார்!

திருச்செந்தூர் முருகன் கோயிலில் சுப்பிரமணிய பிள்ளையைக் கொன்று குவித்து விட்டு—"அவர் தற்கொலை செய்து கொண்டார்" என இங்குள்ள எம்.ஜி.ஆர். அரசு சாதிக்கவில்லையா--அதுபோல;

திருவரங்கம் கோயில் அதிகாரி வெங்கடாசலத்தைத் தீர்த்துக்கட்டி விட்டு; அதையும் தற்கொலை எனக் கூறி மந்திரிகள் தப்பித்து விடவில்லையா—அதுபோல;

மதுராந்தகம் ஞானசௌந்தரியைக் கொன்று ஆளுங்கட்சி எம். எல். ஏ. அலுவலகத்தில் 'தூக்கு மாட்டிக் கொண்டாள் எனக் கதை கட்டவில்லையா—அதுபோல;

புட்லூர் தண்டபாணியை ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் கொன்று விட்டு "குளத்தில் விழுந்து தற்கொலை செய்து கொண்டான்" எனக் கூறவில்லையா—அதுபோல;

மதுரை இளஞ்செழியனை மண்டையில் கல் போட்டுக் கொலை செய்துவிட்டு "கார் விபத்தில் மாண்டுவிட்டான்" என்று கயிறு திரிக்கவில்லையா—அதுபோல;

அண்மைக்காலத்தில், புதுவை, காஷ்மீர், ஆந்திரா என்று இந்திரா காங்கிரஸ் கட்சியின் மத்திய ஆட்சி—ஜனநாயகப் படுகொலைகளைச் செய்து விட்டு; அந்த மாநில ஆட்சிகள் தங்களைத் தாங்களே கவிழ்த்துக் கொண்டன என்று பச்சைப் பொய்யைப் பகிரங்கமாகக் கூறுகிறார் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார்!

"மீண்டு வந்தால் மறுபிறவி" என்பது போல ஆபத்து நிறைந்த அறுவை சிகிச்சையொன்றுக்கு ஆந்திர முதல்வர் ராமராவ் அமெரிக்க நாடு சென்றிருந்த போது அவரது ஆட்சியைக் கவிழ்க்க பாஸ்கர ராவ் என்ற துரோகியைப் பிடிக்கிறார்கள் டெல்லிக்காரர்கள்!

டெல்லியின் சரித்திரத்தில் இது சர்வசாதாரணம்!

திராவிடப் பேரியக்கத்தைப் பிளக்க 1972ல் தமிழகத்தில் ஒரு துரோகியைப் பிடிக்கவில்லையா?

அந்தத் துரோகிக்குப் பட்டம் சூட்ட ஐந்து ஆண்டுக் காலம் காத்திருக்க வேண்டியிருந்தது!

ஆனல் ஆந்திரத்தில் பாஸ்கர ராவுக்கோ—ஐந்தாறு வாரங்களில் அந்தப் பட்டாபிஷேகத்தை நடத்தி முடித்து விட்டார்கள்!

"ஒரு கட்சியைக் கட்டிக் காத்து வெற்றிகளை ஈட்டித் தந்து பதவிகளை வழங்கியவருக்கு—பாஸ்கர ராவ் போன்ற துரோகிகள் காட்டும் நன்றி இதுதானா?"

உடன்பிறப்பே! இப்படிக் கேட்கத் துடிக்கிற தல்லவா இதயம்?

இது ஒன்றும் நமக்குப் புதிய சம்பவமல்லவே! திடுக் கிடும் நிகழ்ச்சியல்லவே!

இந்திராவின் எமர்ஜன்சியை எதிர்த்த காரணத்திற் காக நமது கழக ஆட்சி கலைக்கப்பட்டு, நம்மனோர் பலர் மிசாக் கைதிகளாகி, நான்; நாள்தோறும் நிமிடந்தோறும் வேதனை நெருப்பில் வீழ்த்தப்பட்டு—சோதனைப் பாறை யில் மோதப்பட்ட போது; அதுவரையில் நமது ஆட்சி யில் பதவி, பவிசு என்ற சுகங்களை இறுதி வரையில் அனுபவித்தவர்கள் எத்தனை பேர் துரோகிகளாக மாறி எதிர் வரிசையில் குதித்தனர்—ஏ; அப்பா! தூங்கும் போது தலையில் கல்லைத் தூக்கிப் போடக் கூடியவர்களைப்பற்றி யெல்லாம் அறியாமல் அவர்களின் தோள்மீது கை போட்டுப் பழகினோமே என்பது அவர்களின் துரோகம் வெளிப்பட்ட பிறகுதானே தெரிந்தது!

அதனால் ஆந்திரத்தில் பாஸ்கர ராவ்களும்—அவரைச் சுற்றி ஒரு துரோக அணியும் உருவாகியிருப்பதும், அதனை இந்திரா காங்கிரஸ் உருவாக்கியிருப்பதும் ஆச்சரியத்துக் குரியதல்ல!

சில லட்சியங்களுக்காகவோ—கொண்ட கொள்கை களுக்காகவோ வாழ்வது; அல்லது அதற்காகவே போராடிச் சாவது என்ற உறுதி இல்லாத "ஒதியமிலார் மனிதர்கள்',—சீழ் வழியும் சிரங்குகளில் எல்லாம் சென்று அமரும் ஈக்களைப் போலத்தான், "பதவி! பதவி!" என்று பறந்து கொண்டிருப்பார்கள்!

கொள்கையையும் தன்மானத்தையும் விற்றுவிட்டு- ஏன்? தன்னையே கூட விற்றுவிட்டுப் பதவி தேடியலையும்

பிறவிகளே; நேரிலே விமர்சிக்காத சிலர் கூட, மறைவிலே நின்று "மக்கட் பதர்" என்றுதான் அர்ச்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அத்தகைய "மக்கட்பதர்" ஒன்றைப் பிடித்து ராமராவ் ஆட்சியை—முற்றிலும் ஜனநாயகத்திற்கு விரோதமாகக் கவிழ்த்திருப்பது மக்களாட்சி மாண்புக்கே மாசு தேடும் மகத்தான பாதகச் செயலாகும்!

"பெரும்பான்மையான எம். எல். ஏ.க்கள் என் பக்கம் இருக்கிறார்கள்! சட்டசபையில் வேண்டுமானாலும் இந்த உண்மையை நிரூபிக்கிறேன்; அல்லது இப்போதே நேரில் ராஜ்பவனுக்கு வந்து கவர்னர் முன்னிலையிலேயே எனக்குள்ள பெரும்பான்மையை எண்ணிக் காட்டுகிறேன்"

எனக்கூறி கவர்னர் மாளிகைக்கு வந்த முதலமைச்சர் ராமராவ் அவர்களையும் அவருடன் வந்த எம்.எல்.ஏ.க்களையும் கைது செய்து விட்டு, புதிய முதல்வராகத் துரோகி பாஸ்கரராவை அறிவித்து, உடனடியாகப் பதவிப் பிரமாணமும் செய்து வைக்கிறார் ஒரு கவர்னர் என்றால்; இனிமேல் கவர்னர்கள் இருக்க வேண்டிய இடத்தில்—மனித ஜீவன்களுக்குப் பதிலாக—மத்திய அரசு அனுப்புகிற உத்தரவை வெளியிடுகிற "கம்ப்யூட்டர் மெஷின்கள்" இருந்தாலே போதுமே!

ஜனநாயகத்தின் மீது பற்றுள்ள எல்லாக் கட்சிகளுமே ஆந்திராவில் நடந்துள்ள ஜனநாயகப் படுகொலையையும், கவர்னர் இராம்லாலின் அரசியல் அநாகரிகச் செயலையும் கண்டித்துள்ளன! அநேகமாக எல்லா ஏடுகளுமே "இது ஏற்கத்தக்க முறையல்ல!" என்று தலையங்கங்கள் தீட்டியுள்ளன!

தென்னகத்தில் புதுவையைத் தொடர்ந்து, ஆந்திரத்தில் ஜனநாயகம் சவக்குழிக்கு அனுப்பப்பட்டுள்ளது!

தமிழகத்தை ஒட்டியுள்ள ஆந்திர மாநிலத்தில் இப்படியொரு கொடுஞ்செயல்! தம்பி ராமராவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது குறித்து அண்ணன் எம். ஜி. ஆர். கவலைப்படுகிறாரோ இல்லையோ—கண்டனம் தெரிவிக்கிறாரோ இல்லையோ—தமிழகத்தில் ஜனநாயகத்தின்பால் மதிப்பு வைத்திருப்போர் அனைவரும் மனக்கொதிப்பு கொண்டே இருக்கின்றனர்.

அன்புள்ள,

மு. க.

'முரசொலி'
18-8-84

## "மாநிலப் பிரக்ஞை" இழக்க இயலாது!

உடன்பிறப்பே,

ஆந்திரச்சீமை எரிமலையாகக் குமுறிக் கொண்டிருக்கிறது! ஆத்திரமடைந்த மக்களின் நெஞ்சக்கனல் நெருப்புக் குழம்பாக தெலுங்கு பூமியின் தெருக்களில் ஓடிக் கொண்டிருக்கிறது!

கடைகள் அடைக்கப்பட்டுள்ளன! போக்குவரத்து ஸ்தம்பித்துப் போய்விட்டது! ரயில் நிலையங்களுக்குத் தீ! இதுவரையில் துப்பாக்கிச் சூட்டில் பதினேழு பேர் பலியாகியிருக்கிறார்கள்!

இவ்வாறு உளம் பதைக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கும் போதே இன்று (19-8-84) காலை "அரிய பெரிய கண்டுபிடிப்புக் கருத்து" ஒன்றும் வெளியிடப்பட்டதைக் கேட்டு சிரிப்பதா அழுவதா என்று தெரியாமல் திகைத்துப் போனேன்.

அகில இந்திய இந்திரா காங்கிரசின் பொதுச் செயலாளர்களில் ஒருவரான அருமை நண்பர் கருப்பையா மூப்பனார் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துதான் அது!

காஷ்மீர், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்த ஆட்சிகள் கவிழ்க்கப்பட்டதற்கு இந்திரா காங்கிரஸ் காரணமல்ல என்பது கருப்பையா மூப்பனார் அவர்களின் வாதம்!

இந்த வாதம்—வாய்மையின் அடிப்படையை எள் முனை அளவாவது தொட்டுப் பார்க்கக்கூடிய தகுதி

படைத்ததா என்பதை அவரது மனசாட்சியின் தீர்ப் புக்கே விட்டுவிடலாம்!

அவரது இந்த வேடிக்கையான வாதத்தைத் தொடர்ந்து மற்ருெரு கருத்தையும் மெத்தவும் சிரமப் பட்டுக் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளார்.

**''காஷ்மீர், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் பருக் ஆட்சியும் ராமராவ் ஆட்சியும் கவிழ்ந்ததானது—மாநிலக் கட்சிகள் எனப்படும் பிராந்தியக் கட்சிகளுக்கு மக்களிடம் செல்வாக்கு இல்லை என் பதையே காட்டுகிறது.''**

திருவாளர் கருப்பையா மூப்பஞரின் கண்டு பிடிப்போ—அல்லது அவர் நாவில் எழுதி நாட்டுக்கு அறிவிக்கச் சொன்ன கட்டளையோ; அதைப் பற்றிய ஆராய்ச்சி இப்போது தேவையில்லை.

ஆனல் அவர் திருவாய் மலர்ந்தருளியுள்ள அந்தக் கருத்து உண்மையானதுதாஞ? ஒப்புக்கொள்ளக்கூடியது தாஞ?

பருக் ஆட்சியைக் கலைத்து விட்டு அங்கே இன்ன மும் ராணுவத்தை நம்பிக்கொண்டுதான் ஆட்சி நடத்த வேண்டியிருக்கிறது.

ராமாராவ் ஆட்சியைக் கலைத்து விட்டு அந்தக் காரியம் இந்திரா காந்திக்குத் தெரியாதது போல் நடந்து விட்டதாகப் பிரபல பத்திரிகைகளில் பிரபல கட்டுரை யாளர்களை விட்டு எழுதச் செய்தும் பலனில்லாமல்—ஆந்திரம் கொந்தளிப்பு மிகுந்த கடலாகக் காட்சி தரு கிறது!

மக்களின் வெறுப்பும் கோபமும் எந்தஅளவுக்கு மத் தியில் உள்ள இந்திரா காங்கிரஸ் அரசின் மீது திரும்பி

யுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாமல் நண்பர் மூப்பனர் அவர்கள்; "மாநிலக் கட்சிகளுக்கு செல்வாக்கு மக்களிடமில்லே என்பதையே காஷ்மீர் முடிவும் ஆந்திர முடிவும் காட்டுகிறது" எனக் கதைத்திருப்பது; காதறுந்த ஊசியினும் கீழான கருத்தாகும்!

நண்பர் கருப்பையா மூப்பனர்; காங்கிரஸ் எனும் தேசியப்பேரியக்கத்தின் பொதுச் செயலாளர்களில் ஒருவர்! அவரது வாதத்தை ஒரேயடியாகப் புறக்கணித்து விடாமல்—அவர் எடுத்துவைத்துள்ள வாதத்தையே அடிப்படையாகக் கொண்டு ஆராய்வோம்!

காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சிக்கு மக்களிடம் ஆதரவில்லே—அதனல் பரூக் அப்துல்லா கவிழ்ந்து விட்டார் என்கிருர் திருவாளர் மூப்பனர்!

அப்படியானல் பரூக்கிடமிருந்து விலகி வந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் பன்னிரண்டு பேரும் ஷாவுடன் இணைந்து—தங்களது கட்சிதான் "காஷ்மீர் தேசிய மாநாட்டுக்கட்சி" என்று பழைய பிராந்தியக் கட்சியின் பெயரையே சூட்டிக் கொள்கிருர்களே; அதற்கு என்ன காரணம்? மாநிலக் கட்சி என்ற நிலேயில் இருந்து மாரு மலே இருப்பதாகக் காட்டிக் கொண்டால் தான் மக்களே ஏமாற்ற முடியும் என்பதுதானே முக்கியமான காரணம்!

இல்லேயேல் அந்தப் பன்னிருவரும், ஷாவும் காங்கிர சில் சேர்ந்து பிராந்திய உணர்வே இல்லாத ஒரு தேசீ யக் கட்சியின் அமைச்சரவையை இந்திரா காங்கிரஸ் தலேமையில் அமைத்திருக்கலாமே!

காஷ்மீரில்; துரோகிகள் மந்திரி சபை எப்படி இப் போது பிராந்தியக் கட்சி எனக் கூறிக்கொண்டு இயங்கு கிறதோ; அதைப் போலத்தான்—ஆந்திராவிலும் பாஸ்கர

ராவ் தலைமையில் அமைந்துள்ள துரோகிகள் மந்திரி சபையும் தன்னைத் தெலுங்கு தேசக் கட்சியின் மந்திரி சபை எனக் கூறிக் கொள்கிறது!

பருக் அப்துல்லாவை வீழ்த்தி விட்டதால் காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சி என்ற பெயரையும் வீழ்த்தி விட முடியவில்லை! பிராந்தியக் கட்சி என்ற காரணத்தைக் காட்டி!

ராமாராவை வீழ்த்தி விட்டதால் அவர் உருவாக்கிய தெலுங்கு தேசக் கட்சி என்ற பெயரையும் வீழ்த்திவிட முடியவில்லை; பிராந்தியக் கட்சி என்ற காரணத்தைக் காட்டி!

அந்தப் பெயர்களை வைத்துக் கொண்டுதான் துரோகிகளின் ஆட்சிகளைக் தற்காலிகமாகவாவது முட்டுக் கொடுத்து காப்பாற்ற முடியுமென இந்திரா காங்கிரஸ் நம்புகிறது!

தமிழ்நாட்டில் தி. மு. கழகம் அல்லது அ. தி. மு. க. என்ற இரண்டில் ஒரு பிராந்தியக் கட்சியுடன் உடன்பாடு கொண்டால்தான், இந்திரா காங்கிரஸ் கட்சி; தேர்தல்களையே எதிர்கொள்ள முடிகிறது!

திருச்செந்தூர் இடைத் தேர்தலிலும்—பெரியகுளம் இடைத் தேர்தலிலும் தனித்து நின்ற இந்திரா காங்கிரஸ் அடைந்த கதி என்ன? பெற்ற வாக்குகள் எத்தனை?

உடன்பிறப்பே; திருவாளர் மூப்பனார் அவர்களின் வெளியிட்டுள்ள கருத்தை ஆழமாக நோக்குமிடத்து ஒன்று தெளிவாகப் புரிகிறது!

மாநிலக் கட்சிகளின் பெயர்களைச் சொல்லிக் கொண்டும்—அவற்றின் ஆதரவைப் பெற்றுக் கொண்டும் இறுதியாக அந்த மாநிலக்கட்சிகளை அழித்து ஒழித்து

விடுவதே இந்திரா காங்கிரசின் குறிக்கோளாகவும் உள் நோக்கமாகவும் இருக்கிறது என்பதுதான் மறுக்க முடியாத உண்மையாகும்!

ஆனல் ஒன்று! உறுதியாகச் சொல்லுகிறேன்;

“அரசியல் சட்டம் உருவான பிறகு மொழி வாரி மாநிலங்கள் தேவையென்ற குரல் எழுப்பப் பெற்று, அது மதிக்கப்பட்டு, மொழி வாரியாக நிலப்பரப்புக்கள் பிரிக்கப்பட்டு—அ ந் த ந் த நிலப்பரப்புகளுக்குள்ளும் குறிப்பிட்ட தாய்மொழியைக் கொண்டவர்கள், அவர்களுடைய தாய்மொழிக்கு செல்வாக்கு இருக்க வேண்டும்; அந்தத் தாய்மொழிதான் தமது மாநிலங்களில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்ற அவசியம் உணரப்பட்டு—இப்பொழுது 35 ஆண்டு காலமாக ஒரு “மாநிலப் பிரக்ஞை”—அதாவது உணர்வு—ஆங்கிலத்தில் கூற வேண்டுமானல் State Consciousness—ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறந்து விட இயலாது.”

–என 1983 மார்ச் 29 ஆம் நாள் நான் தமிழக சட்டப் பேரவையில் குறிப்பிட்டதை மீண்டும் இப்போது நினைவூட்டுகிறேன்.

பெங்களூரில் ஜனதா கட்சி முதலமைச்சர் ஹெக்டே அவர்கள் கூட்டிய தென்மாநில முதல்வர்கள் மாநாட்டுக்கு தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆரும், ஆந்திர முதலமைச்சர் ராமாராவும், புதுவை முதலமைச்சர் டி. ராமச்சந்திரனும் சென்று கலந்து கொண்டு, மாநில உரிமைகள்–அதிகாரங்கள் பற்றி ராஜமன்னர் குழு அறிக்கையின் அடிப்படையில் கருத்துக்களை வெளியிட்டு அறிக்கை விடுத்தனரே; அந்த மாநாட்டை வரவேற்று சட்டப் பேரவையில் மார்க்சிஸ்ட் கமயூனிஸ்ட் கட்சித் துணைத் தலைவர் தோழர் உமாநாத் அவர்கள் கொண்டு வந்த பாராட்டுத் தீர்மானத்தை வரவேற்றுப் பேசிய

போதுதான் "மாநிலப் பிரக்ஞை" அல்லது, "மாநில உணர்வு" குறித்து விளக்கமளித்து; அதில் தி.மு. கழகம்—அன்றும், இன்றும், என்றும் நிலை மாறாமல் இருக்கு மென்று அறிவித்தேன்.

யார் என்ன சொன்னபோதிலும்—எத்தனை எதிர்ப்புகள் எத்தனை சோதனைகள் வந்தபோதிலும்—

"மாநிலத்தில் சுயாட்சி

மத்தியிலே கூட்டாட்சி"

என்ற நமது கழகத்தின் குறிக்கோள் நிறைவேற—அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்ற சூளுரையை இதயத்தில் பதித்து ஏறுநடைப் பயணத்தைத் தொடருவோம்!

மாநில உணர்வுகளுக்கு மதிப்பு தாராமல் தேசிய உணர்வுக்கு மட்டும் மதிப்பு தருவேன் என்பதற்கும் "மாதா வயிற்றை எரியவிட்டு—மகேஸ்வரன் பூசை செய்தேன்" என்பதற்கும் எந்தவொரு வேறுபாடும் இல்லை என்பதைத்தான், மாநில உணர்வை மறுக்கும் மூப்பனார் போன்றவர்களுக்கும் அவருக்கு மேலிடத்தில் இருப்பவர்களுக்கும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அன்புள்ள,

மு. க.

'முரசொலி'
20-8-84

# காலம் கடந்த ஞானோதயம்!

உடன்பிறப்பே,

என்.டி. ராமராவ் ஆட்சியை டிஸ்மிஸ் செய்தது குறித்து பி.டி.ஐ. அல்லது யு.என்.ஐ. செய்தி நிறுவனத் தின் மூலம் வந்த தகவலுக்குப் பிறகுதான் அப்படி யொரு நிகழ்ச்சி ஆந்திர மாநிலத்தில் நடந்திருப்பதாகவே பிரதமர் இந்திரா காந்திக்குத் தெரியுமாம்!

இதனைப் பிரதமரே நாடாளுமன்றத்தில் கூறியிருக் கிறார்! சொல்வது பிரதமராயிற்றே; நம்பத்தானே வேண் டும்!

கவர்னர் ராம்லால் என்ற பழுதடைந்து போன கம்ப்யூட்டருக்கு டெல்லியில் இருந்து எந்தக் கட்டளை யும் திணிக்கப்பட வில்லையாம்—மேலிடத்துக்குத் தெரியா மலே ராமராவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டுள்ளதாம்— இப்படிச் சொல்லியுள்ள பிரதமர் அவர்கள்; பாஸ்கர ராவுக்கு ஆந்திராவில் உள்ள இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றும், நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

பிரதமரின் கூற்றுப்படி, ஆந்திர கவர்னர் ராம்லால் என்பவர் இந்திரா அம்மையாருக்கு; அதாவது பிரதமருக் குத் தெரிவிக்காமலே, ராமராவ் அவர்களுக்குப் பெரும் பான்மை பலம் இருந்தும் கூட அவரை டிஸ்மிஸ் செய் திருக்கிறார்—

அதை விட வேடிக்கை; ஆந்திராவில் உள்ள இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள்; தங்களின் கட்சித் தலைவியான திருமதி இந்திரா காந்திக்குத் தெரியாமலே பாஸ்கர ராவ் என்ற ஒரு நன்றியுள்ள (?) மனிதனை ஆதரித்து வாழ்த்துக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்,

இவைகளை விடப் பெரிய வேடிக்கை அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர்களான மூப்பனார் போன்ற இரண்டு மூன்று பேர் ஆந்திராவுக்கு விமானத்தில் பறந்து சென்று, புதியமுதலமைச்சர் பாஸ்கர ராவுக்குப் பாராட்டு தெரிவித்ததும்—ராமராவ் கட்சிக்குப் பெரும்பான்மை இல்லை என்று அறிவித்ததும்—அதனால் என்.டி.ஆர். ஆட்சி கவிழ்ந்தது இயற்கையே என நியாயப்படுத்திப் பேசியதும்—இத்யாதி காரியங்கள் அனைத்தும் கட்சித் தலைவியின் அனுமதியில்லாமலே அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர்களால் நடத்தப் பட்டுள்ளன.

தனக்கு ஆதரவான சில எம்.எல்.ஏ. க்களின் நிழல்களையும் இரட்டிப்பு மடங்காக எண்ணிக் காட்டி நாடகமாடிய துரோகி பாஸ்கர ராவ்; கவர்னர் ராம்லால் என்ற ஜனநாயகக் கொலைகாரரால் முதலமைச்சர் என்று அறிவிக்கப்பட்ட போது— "சட்டசபையில்தான் மெஜாரிட்டியை நிரூபிக்க வேண்டும்" என்று அவசரச் செய்தியொன்றை ஆந்திர கவர்னரின் மாளிகைக்கு அனுப்பாமல் இருந்துவிட்டப் பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள்—இப்போது நூற்றி அறுபத்தேழு சட்டமன்ற உறுப்பினர்களை ராமராவ் அவர்கள் டெல்லியில் உள்ள குடியரசுத்தலைவர் ஜெயில்சிங் முன்னிலையில் நிறுத்துகிறபோது மட்டும்; "சட்டசபையில்தான் மெஜாரிட்டியை நிரூபிக்க வேண்டும்" என்று கூறுவதின்

உள்நோக்கம் என்ன என்பதை உலகம் புரிந்துகொள்ளாமலா இருக்கிறது!

பாஸ்கர ராவ் என்ற துரோகி; தன்னிடம் தொண்ணூறு சட்டமன்ற உறுப்பினர் இருப்பதாகவும்-இந்திரா காங்கிரசும் தனக்கு ஆதரவு தருவதாகவும்—எனவே, தன்னை முதலமைச்சராக அறிவிக்க வேண்டுமென்றும் கூறியபோது 'சட்டசபையில் யாருக்குப் பெரும்பான்மை என்பதை சோதித்துப் பாருங்கள்'' என்று முறையிட்ட என். டி. ராமராவ் அவர்களை; அவர் இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டு வந்தவர் என்றும் பாராமல்-போலீஸ் லாரியில் தூக்கிப் போட்டுக் கைது செய்து அழைத்துச் செல்ல ஆணையிட்ட கவர்னர் ராம்லால்; தன்னிசையாகத்தான் செயல்பட்டார் என்று யாராவது சொன்னால், அப்படிச் சொல்கிறவர்களின் மனச்சாட்சியைச் சந்தேகப்படத்தானே வேண்டும்!

ஆந்திராவில் மக்கள் எழுச்சியை எதிர்கொள்ள முடியாமல் மத்திய மாநில அரசுகள் தடுமாறுகின்றன!

அநீதியை எதிர்த்து ஆந்திரம் அக்கினிக் காடாகக் காட்சி தருகிறது!

இந்திரா காங்கிரஸ் கட்சி நடத்தும் ஜனநாயகப் படுகொலைக்கு முடிவே கிடையாதா என்று நெருப்புக் கேள்விகள் நெஞ்சைப் பிளந்துகொண்டு கிளம்புகின்றன!

யார் தலையில் பழியைப் போட்டுத் தப்பித்துக் கொள்ளலாம் என்று, கல்லைத் தூக்கிக் கையில் வைத்துக் கொண்டு, ஆளைத் தேடி அலைகிறார்கள்!

ஆந்திர மாநிலம் மட்டுமல்ல; இந்திய நாடே கொதித்தெழுந்து குமுறுகிறது என்ற நிலை பிறந்தவுடன்—ஆறு நாட்களாக மௌனமாக இருந்த நண்பர் எம்.ஜி.ஆர்.

கூட; முதலில் ஒரு கண்டனத் தந்தி அனுப்பிவிட்டு—பிறகு அந்தத் தந்தியைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக அறிவித்து விட்டு, இப்போது வேறு வழியில்லாமல் "எல்லாம சுபமாக முடியும்" என்று கூறியிருக்கிருர் பார்த்தாயா?

ஆந்திராவில் தொடர்ந்து நடக்கும் கிளர்ச்சி!

இந்தியா முழுமையும் போர்க்கோலம் பூண்டிடும் என்பதற்கு அடையாளமாக டெல்லியில் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டம்!

சர்வதேச பத்திரிகையாளர்கள் உண்மையை நேரில் கண்டு நடத்த இருக்கிற விமர்சனம்!

இவற்றின் கிடுக்கிப் பிடியில் சிக்கித் தவிப்பவர்கள்; செய்வதறியாது விழிக்கிருர்கள்!

என்னதான் வாய்ஜாலம் செய்து தங்களின் நடவடிக்கைகளுக்குச் சமாதானம் தேட முயன்ருலும்; உலகம் அவர்களைச் சரியாக அடையாளம் கண்டு கொண்டிருக்கிறது என்பதை மட்டும் மறைத்துவிட இயலாது! காலம் கடந்த ஞானோதயத்தினுல் களங்கத்தைக் கழுவிக் கொள்ள முடியாது!

அன்புள்ள,

மு. க.

'முரசொலி'
23-8-84

# ஜி. கே. ரெட்டியின் திசை திருப்பும் முயற்சி!

உடன்பிறப்பே,

ஆங்கில ஏடுகளில்—குறிப்பாகவும் சிறப்பாகவும் "இந்து" ஏட்டில்—எழுதும் அரசியல் ஆய்வுக் கட்டுரை களின்மூலம் புகழ் பெற்றவர் திரு. ஜி. கே. ரெட்டி என் பதை நீஅறிவாய்!

குறிப்பிடத்தக்க அரசியல் விமர்சகர்களில் ஜி. கே. ரெட்டியும் ஒருவர் என்ற முறையில் அவரது எழுத்துக் களை ஆர்வமுடன் நான் படிப்பதுண்டு!

நாம் சில பிரச்சினைகளில் கொண்டுள்ள கருத்துக் களுக்கு மாறுபாடாக அவரது கட்டுரைகள் அமைந்திருந் தாலும்—உள்ளார்ந்த வட்டாரங்களில் உருவாகிற நிலைமைகளை அவரது எழுத்துக்கள் "ஆரூடம்" போல எடுத்துக்காட்டக்கூடியவை என்பது அனுபவ ரீதியான உண்மையாகும்.

ஆந்திர மாநிலத்தில் நூற்று அறுபத்தெட்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் என். டி. ராமராவ் அவர்களின் பக்கம் இருக்கிறார்கள் என்றும்—அதனை நிரூபிக்கத் தயார் என்றும்—உடனடியாக சட்டசபையைக் கூட்டி ணல் தனது பெரும்பான்மையை உணர்ந்து கொள்ள முடியுமென்றும்—முதலமைச்சர் ராமராவ்; ஆந்திர கவர்னர் ராம்லாலிடம் எடுத்துக் கூறியும்கூட—அதனைக் காதிலே போட்டுக் கொள்ளாமல்; துரோகி பாஸ்கர ராவைத் தூக்கி முதலமைச்சர் நாற்காலியில் உட்கார

வைத்துவிட்ட நிகழ்ச்சியை திரு. ஜி. கே. ரெட்டி ஆதரிப்பதாகத் தெரியவில்லை.

இப்படியொரு நிலையை ஆந்திராவில் உருவாக்கியதின் காரணமாக இந்திரா காங்கிரஸ் கட்சி செல்வாக்கிழந்து விடும் என்று கோடிட்டுக் காட்டவும் திரு. ஜி.கே. ரெட்டி தவறவில்லை.

ஆனல் அதே நேரத்தில்—ஆந்திராவில் நடந்த இந்த திட்டமிட்ட சதிச் செயல்கள் எதுவும் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு முன் கூட்டியே தெரியாது என்று எடுத்து வைக்கப்படுகிற வாதத்திற்கு வலுவூட்டும் வகையில் திரு. ஜி. கே. ரெட்டி, கட்டுரைத் தொடர்கள் எழுதி வருவது—அவர்; தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிருரா ...அல்லது வாசகர்களை ஏமாற்ற எண்ணுகிருரா என்று தான் விளங்கவில்லை!

நியாயத்தை அவரால் புறக்கணிக்க முடியவில்லை—நடந்துவிட்ட தவறுகளுக்கு அவரால் வக்காலத்து வாங்க முடியவில்லை—இமயம் முதல் குமரி வரையில் உள்ள மக்கள் சக்தி; இந்திரா காங்கிரசின் ஜனநாயக விரோதச் செயலைக் கண்டித்து ஆர்த்தெழுந்திருப்பதை அவரால் அலட்சியப்படுத்த முடியவில்லை! எனவே; ஆந்திராவில் நடைபெற்றுள்ள ஜனநாயகப் படுகொலையைக் கண்டிக்கும் தோரணையில் அவரது பேனமுனை கனல் கக்குகிறது!

ஆனல் அந்த ஜனநாயகப் படுகொலையை நடத்தியதாக இ. பி. கோ. 302 வது பிரிவை கவர்னர் ராம்லால்மீது பிரயோகிக்க வேண்டுமெனக் குறிப்பிடுவது போலப் பொருள் வழங்கும் அவரது கட்டுரை; அந்த கொலை முயற்சிக்குத் தூண்டுதலாக இருந்து ஊக்கமளித்தவர்கள் மீது இ. பி கோ. 307வது பிரிவைப் பிரயோகிக்க வேண்டுமென, நாடு முழுவதும் குரல் கிளம்பும் போது—அந்தப்

பிரிவு நெருங்க முடியாத இடத்திலே கொண்டுபோய், பிரதமர் இந்திராகாந்தி அவர்களை நிறுத்தி காப்பாற்ற முனைகிறார்.

''இந்திராகாந்தி அவர்களுக்கு ராமராவ் முதலமைச்சராக வருவதிலோ அல்லது நீடிப்பதிலோ தனிப்பட்ட முறையில் எந்த வெறுப்பும் இல்லை''

என்ற ஒரு வாசகத்தைத் தனது கட்டுரையின் இடையில் புகுத்துவதின் மூலம் ஆந்திராவில் நடைபெற்ற ஜனநாயகப் படுகொலையில் 307வது செக்ஷன்; பிரதமர் மீது பாய்ந்து விடாமல் பாதுகாப்பு வழங்குகிறார் திரு. ஜி. கே. ரெட்டி!

ஆனால் அதே நேரத்தில் டெல்லியில் உள்ள மேலிடத்தின் செல்வாக்குமிகுந்த சில பிரமுகர்களின் பேச்சுக்கிணங்க ஆந்திர கவர்னர் மூர்க்கத்தனமாக நடந்து கொண்டதைக்கண்டு ஆந்திர மக்கள் கொந்தளிப்பைப் பார்த்து பிரதமரும் அவரது ஆலோசகர்களும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்—என்றும் ஜி.கே.ரெட்டி எழுதியுள்ளார்.

ஆந்திர மக்களின் கொந்தளிப்பு கண்டு பிரதமருக்கு அதிர்ச்சியா?

தனக்கு தெரியாமல் தன்னைச் சுற்றியுள்ள செல்வாக்கு மிக்க பிரமுகர்கள் ஆந்திர கவர்னருக்கு ஆணையிட்டு ராமராவ் ஆட்சியைக் கவிழ்த்ததால் பிரதமருக்கு அதிர்ச்சியா?

இந்த இரு நிலைகளாலும் அதிர்ச்சி என்றால்—ஆந்திர மக்கள் கொந்தளிக்காமல் இருந்திருந்தால் பிரதமருக்கு அதிர்ச்சியோ கவலையோ ஏற்பட்டிருக்காது என்று கருதிட இடமிருக்கிறது அல்லவா?

பிரதமரையும் மீறி ஒரு மாநில ஆட்சியைச் சட்ட விரோதமாக—ஜனநாயக விரோதமாக—மிருகத்தனமாக கலைத்து விடக்கூடிய வலிமை வாய்ந்த அந்த மேலிடத்து சக்தி எது? அந்த சக்தியைப் பெற்ற செல்வாக்கு தேவதைகள் யார்?

"கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது" என்பார்கள்!

தண்ணீர் பொங்கியிருந்தால் நான்தான் வெட்டினேன் என்பது!

பூதம் புறப்பட்டால் எனக்குத் தெரியாமல் யாரோ கிணறு வெட்டிவிட்டார்கள் என்பதா?

"பூதம் புறப்படக் காரணமாக இருந்தவர் பிரதமர் அல்ல; வேறு யாரோ சில பொல்லாதவர்கள்" என்று அவர்கள் மீது 307 வது செக்ஷனை பிரயோகிக்க திசை திருப்பும் முயற்சியாகத்தான் ஜி. கே. ரெட்டி அவர்களின் கட்டுரைகள் தென்படுகின்றன!

ஆனல் தெளிவடைந்துள்ள மக்கள்; வீட்டுக்கு நெருப்பு வைத்தவர்கள் யார் என்பதை விபரமாகப் புரிந்து கொண்டுதானிருக்கிறுர்கள்.

அன்புள்ள,

மு. க.

'முரசொலி'
24-8-84

அறக்.
கு. ஆ. பேராசிரிய
ஆய்வக நூ
நிலையம்
சென்னை-1
அறிவா

# எழுக நீ! எழுக எழுகவே!

உடன்பிறப்பே,

டெல்லியில் ஓர் அரசும், தமிழ்நாட்டில் ஓர் அரசும்... மக்களுக்கு நீதி போதனை செய்திடத் தங்களைவிட்டால் ஆள் இல்லை எனக் கருதிக்கொண்டு மனம்போன போக்கில் பேசிக் கொண்டிருக்கின்றன! அவ்வாறே செயல் பட்டுக் கொண்டுமிருக்கின்றன!

இந்தப் போக்கினை எதிர்த்துக் கண்டனக்குரல் எழுப்பிட—எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டு அறப்போராட்டத்தில் ஈடுபட்டால்; உடனே அந்தக் கட்சிகளை தேச விரோத சக்திகள் என்று பிரதமர் இந்திரா காந்தி வர்ணித்து விடுகிறார்! இங்குள்ள எம். ஜி. ஆர். அவர்களோ; சமூகவிரோத சக்திகள் எனக்கூறி அடக்கு முறையை ஏவி விடுகிறார்.

இதோ—இன்றைக்கு ஆகஸ்டு 25 தமிழக முழுதும் நமது முற்போக்கு அணியின் சார்பில் நடைபெறுகிற அறப்போர் மறியலையொட்டி, முன்கூட்டியே ஆயிரக் கணக்கான தொண்டர்களும்—முன்னணி வீரர்களும் பல்வேறு மாவட்டங்களில் கைது செய்யப்பட்டு அடைக் கப்பட்டுள்ளனர்.

ஆந்திராவில் நடைபெற்ற ஜனநாயகப் படுகொலையைக் கண்டிக்கிறோம் என்று அணி திரண்டால் அதனை இந்திரா காந்தி அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை!

நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளான தேச ஒற்றுமை—ஒருமைப்பாட்டு உணர்வு ஆகியவற்றிலிருந்து திசை திருப்புவதற்காகத்தான் எதிர்க்கட்சிகள் ''ஜன நாயகப் படுகொலை'' என்ற முழக்கத்தை எழுப்புகின்றன என்பதாகப் பிரதமர் அவர்கள்; அவர்களது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் குற்றம் சாட்டியிருக்கிறார்.

உயிரோடு தெருவில் நடமாடிக் கொண்டிருந்த மனிதன் மீது ஒரு மூர்க்கன் பாய்கிறான். கையிலிருந்த கொடுவாளால் கழுத்தை வெட்டுகிறான். ஒரு விநாடிக்கு முன் சிரித்துப் பேசிக்கொண்டு தெருவில் சென்ற அந்த மனிதன் இரத்த வெள்ளத்தில் மிதக்கிறான். துடிதுடித்துச் சாகிறான். அந்தக் கோர நிகழ்ச்சியைக் கண்ணால் கண்ட அந்தத் தெருமக்கள்; ''அதோ ஓடுகிறான்! அவன்தான் கொலைகாரன்! விடாதே; பிடி!'' என்று துரத்துகிறார்கள். ஓடிய கொலைகாரன், போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டில் நுழைந்து கொள்கிறான். அவனைத் துரத்தி வந்த மக்களிடம்; இன்ஸ்பெக்டர் விபரம் கேட்கிறார்! ''கொலைகாரன் உங்கள் வீட்டில் ஒளிந்திருக்கிறான்'' என்று கூச்சலிடுகிறார்கள் மக்கள்! ''முட்டாள்களே! நீங்கள் ஊரின் அமைதியையும்—காவல் துறையின் கடமை உணர்வையும் களங்கப்படுத்த; கொலையென்றும்—கொலைகாரனென்றும் கூப்பாடு போடுகிறீர்கள்! மரியாதையாகப் போய்விடுங்கள்!'' என்று இன்ஸ்பெக்டர் கோபாவேசமாகப் பேசுகிறார்!

உடன்பிறப்பே; இதே நிலைதான், இன்று நாட்டில் பல மாநிலங்களில்!

முப்பது பேர் உள்ள புதுவை சட்டமன்றத்தில் பதினேழு பேர் ஆதரவு கொண்ட தி. மு. க. வுக்குப் பெரும்பான்மை இல்லை என்று கூறிச் சட்டசபையைக் கலைத்தார்கள்.

முப்பத்திரண்டு பேர் கொண்ட சிக்கிம் சட்டமன்றத்தில் பதினெட்டு பேர் தன் பக்கம் இருப்பதாக நிரூபித்துக் காட்டிய பண்டாராவின் கட்சியை ஏற்காமல் அங்கேயும் ஆட்சியைக் கலைத்தார்கள்.

பரூக் அப்துல்லாவின் கோரிக்கையை ஏற்று, சட்டமன்றத்தைக் கூட்டிப் பலப்பரீட்சைப் பார்ப்பதற்கு முன் வராமல்—பரூக் அப்துல்லாவைக் கவிழ்த்துவிட்டு; ஷா என்பவரை முதலமைச்சர் என்றே அறிவித்து—பன்னிரண்டு பேர் கொண்ட ஷாவின் கட்சிக்கு இருபத்தாறு காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் ஆதரவு அளித்தார்கள்.

தேவைக்கு மேற்பட்ட பெரும்பான்மை என்னிடம் இருக்கிறது—நேரிலே வேண்டுமானுலும் எண்ணிக் கொள்க; அல்லது சட்டமன்றத்தை உடனடியாகக் கூட்டித் தெரிந்து கொள்க என்று ராமராவ் அவர்கள் அறிவித்தும்கூட; ஆந்திரத்துக் கவர்னர் ராம்லால் என்பவர், ராமராவ் அவர்களை டிஸ்மிஸ் செய்துவிட்டு—துரோகி பாஸ்கரராவை முதல்வராக அறிவிக்கிருர்!

இவைகள் எல்லாம் ஜனநாயகப் படுகொலைகள் அல்லவாம்!

தேச ஒற்றுமை—ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு விரோதமாக எதிர்க் கட்சிகள்; ஜனநாயகப் படுகொலையென்று திசை திருப்புகின்றனவாம்! இந்திரா அம்மையார் சொல்கிருர்!

“ஊரின் அமைதியையும்—காவல் துறையின் கடமை உணர்வையும் களங்கப்படுத்த கொலை! கொலை! என்று கூச்சலிடுவதா?” எனக் கேட்கும் இன்ஸ்பெக்டருக்கும்—பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரின் குற்றச்சாட்டுக்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை!

இன்ஸ்பெக்டரின் பேச்சைக் கேட்டு அவரைச் சுற்றி யிருந்த காவலர்கள்; கொலேகாரனைத் துரத்தி வந்த மக்களைக் கைது செய்து சிறையில் அடைப்பது போலத் தான்—அந்தக் காவலர்களில் ஒருவராகச் செயல்படும் தமிழக முதலமைச்சர் அவர்கள்; அறப்போர் அடையாள மறியலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே—ஜனநாயகத் துக்கு எதிராகவும்—மக்களுக்கு விரோதமாகவும் செயல் படும் அரசுகளைக் கண்டிப்பது தவறு என்ற நிலேயெடுத்து பல மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான தொண்டர் களைக் கைது செய்துள்ளார்.

கொலேகாரனை; இன்ஸ்பெக்டரே மறைத்து வைத்து விட்டு—அவனுக்காக வக்காலத்து வாங்கிப் பேசுவதிலே யிருந்து வேலியே பயிரை மேய்ந்த கதையாக, அந்தக் கொலே முயற்சிக்கான தூண்டுதலே அவரிடமிருந்துதான் வந்திருக்கிறது என்ற உண்மையை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள மாட்டார்களா?

அதேபோல ஆந்திரத்தில் நடைபெற்றுள்ள ஜன நாயகப் படுகொலேயைச் சுட்டிக்காட்டாத ஏடுகள் இல்லே! ஜனநாயகத்தில் பற்றுள்ள அரசியல் வாதிகள். நடுநிலேயாளர்கள் அனைவருமே கண்டனக் குரல் எழுப்பி யுள்ளனர்.

ஆனல் இந்திரா அம்மையார் அவர்களோ; இவற்றை ஜனநாயகப் படுகொலே எனக் கூறுவது தேச விரோதம் என்றும், ஒருமைப்பாட்டுக்கு எதிரானது என்றும் விமர்சிக் கிறார்!

நான் குறிப்பிட்ட நிகழ்ச்சியில் வரும் இன்ஸ்பெக்ட ராக இந்திரா காந்தி அம்மையாரும்—அவர் ஆணைக்காக நிற்கும் காவலராக எம். ஜி. ஆர். அவர்களும் தோற்ற மளிக்கிறார்களா அல்லவா?

அண்மையில் ஒரு பேட்டியில் காஷ்மீரத்துப் பழம் பெரும் அரசியல் வாதியான சையத் மிர்காசிம் அவர்கள் மிகவும் மனம் நொந்து ஒன்றைக் கூறியிருக்கிறார்.

"I am very sure that soon, I too am going to be labelled a Secessionist by Mrs. Gandhi. Madam Indira Gandhi's logic is simple. "Either you are with me or you are anti-Indian"

"என்னைக் கூட இந்திரா காந்தி ஒரு பிரிவினை வாதி என விரைவில் முத்திரைக் குத்திவிடக் கூடும். இந்திரா காந்தியின் தத்துவம் மிக எளிமையானது. அவர் அணி யில் இருக்க வேண்டும், இல்லையேல் அவர்கள் இந்தியர் களே அல்லர்."

மீர்காசிம் அவர்கள் வடித்துள்ள கருத்தை மெய்ப்பிப் பதைப் போலத்தான் ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போர்க்கொடி தூக்குகிற யாராக இருந்தாலும் அவர்களைப் பிரிவினைவாதிகள்—தேசத்துரோகிகள்—ஒருமைப்பாட்டுக் குப் பகைவர்கள்—என்று ஏதாவது ஒரு முத்திரையைக் குத்தி ஒழித்துக் கட்ட முனைவது திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் வாடிக்கையாக இருந்து வரு கிறது.

ஜனநாயகம் காத்திட "எமர்ஜன்சி"யை எதிர்த்து நின்ற கழக ஆட்சியைக் கலைப்பதற்கு எத்தனை எத்தனை வீண்பழிகளைச் சுமத்தினார்கள்! அதேபோலத்தான் இப் போதும் பேசுகிறார்கள்—குற்றம் சுமத்துகிறார்கள்!

எமர்ஜென்சியைக் கையில் வைத்துக்கொண்டு ஜன நாயகப் படுகொலை புரிந்தபோது அதனை ஆதரித்து ஆல வட்டம் சுழற்றிய எம். ஜி. ஆர். அவர்கள்; இப்போது எமர்ஜென்சி என்று அறிவிக்காமலே எதிர்க் கட்சிகளை

ஒழித்துக்கட்டும் பிரதமர் இந்திரா அம்மையாரின் பக்கம் நிபந்தனையற்ற ஆதரவு தந்து நிற்பதோடு அல்லாமல்— ஜனநாயகப் படுகொலையை எதிர்க்கும் அனைத்துக் கட்சி முற்போக்கு அணியினரை அடக்குமுறைமூலம் சந்திக்கப் புறப்பட்டு விட்டார்.

இந்திரா அரசின் தவறுகளையும் எம். ஜி. ஆர். அரசின் தவறுகளையும் வன்மையாகக் கண்டித்து எழுந்துள்ள தமிழக மக்களின் வலிமை வாய்ந்த அணிவகுப்பை; அடக்குமுறைப் பூச்சாண்டி காட்டி எம். ஜி. ஆர். அவர்களால் ஒடுக்கிவிட முடியாது!

இதனை அமைதி வழி நின்று—அறப்போர்க் களம் சென்று மெய்ப்பித்திட; என் அன்பு உடன்பிறப்பே! எழுக நீ! எழுக நீ! எழுக; எழுகவே!

அன்புள்ள,

மு. க.

'முரசொலி'
25-8-84

# இந்திரா காங்கிரசார் சிந்தனைக்கு!

உடன்பிறப்பே,

வாரணசி, ஜாம்ஷெட்பூர் ஆகிய இடங்களில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்கள்; ஆய்வு எதுவும் நடத்தாமலே பட்டி மன்றமோ—கருத்தரங்கமோ கூட்டாமலே—முரண் பாடான கருத்துக்கள் என்பதை நாட்டுமக்கள் தெளி வாக உணர்ந்து கொள்வார்கள்.

''எதிர்க்கட்சிகளுக்குக் கொள்கைகள் எதுவும் கிடையாது. கொள்கை அடிப்படையில் ஒன்று சேரவில்லை. எப்படியாவது ஆட்சி யைப் பிடிக்க வேண்டுமென்று கருதுகிறார்கள்.''

பிரதமரின் இந்த விமர்சனம்; அவரையும், அவரது கட்சியையும் திருப்பித் தாக்கக்கூடிய இரு முனையும் கூர் உள்ள கத்தி என்பதை என்ன காரணத்தினாலோ பிரதமர் மறந்துவிட்டார்கள்.

ஜாம்ஷெட்பூரில் பிரதமர் ஆற்றிய உரையில் இதோ; இன்னொரு முக்கியமான பகுதி:-

''ஜம்மு- காஷ்மீரிலும் ஆந்திர மாநிலத்திலும் இந்திரா காங் கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள்; அங்கு ஆளுங் கட்சியிலிருந்து பிரிந்த கோஷ்டிகளுக்கு ஆதரவு தந்தது உண்மை தான்''

இப்போது இந்திரா அம்மையார் பதில் அளிக்க வேண்டி கேள்வி ஒன்று எழுகிறது!

"அம்மையார் அவர்களே! எதிர்க்கட்சிகள், கொள்கை அடிப்படையில் ஒன்று சேரவில்லை என்கிறீர்கள்: சரி! அப்படியானால் காஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சியிலிருந்து பிரிந்து வந்த பனிரெண்டு பேர்களை இருபத்தாறு காங்கிரஸ் உறுப்பினர்கள் தாங்கிப் பிடித்து; அந்த சிறுபான்மைக் கோஷ்டியை ஆட்சியில் அமர்த்தியது எந்தக்கொள்கையின் அடிப்படையில்?

அம்மையார் அவர்களே! மாநில உணர்வுகள், மாநிலக் கட்சிகள் கூடவே கூடாது என அண்மைக் காலத்தில் முழங்கி வரும் தாங்கள்; காஷ்மீரில் தேசீய மாநாட்டுக் கட்சி என்ற பெயருடன் ஆட்சியில் அமர்ந்துள்ள "மீர்ஜாபர்" ஷா என்பவருக்கு ஆதரவு தருவதும் —அவரை ஆட்சி நடத்தச் சொல்லி ஆலவட்டம் பிடிப்பதும்; என்ன கொள்கை என்பதைச் சற்றே விளக்குவீர்களா?

ஆந்திரத்திலே கூட துரோகி பாஸ்கர ராவ் கையில்; ராம்லால் என்ற ஆளுநர்—(மன்னிக்கவும்: ஆடுநர்) தூக்கிக் கொடுத்த முதலமைச்சர் பதவிக்கு இன்னமும் தங்களின் காங்கிரஸ் கட்சி முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறதே; அது எந்த கொள்கையின் அடிப்படையில்?

"தெலுங்கு தேசம்" என்ற மாநிலக் கட்சியின் பெயரையே தனது ஆட்சிக் கட்சிக்கும் பாஸ்கர ராவ் சூட்டிக் கொண்டிருக்கும் போது, எந்தக்கொள்கை அடிப்படையில் அந்தக் கட்சியுடன் ஒன்று சேர்ந்திருக்கிறீர்கள்?

எதிர்க்கட்சிகள்; தங்களுக்கெனத் தனித்தனிக் கொள்கையைத் தனித் தன்மையுடன் வைத்துக் கொண்டு —ஒரு பொதுப் பிரச்சினைக்காக ஒன்று சேரும்போது "கொள்கை என்ன ஆயிற்று?" என்று குற்றம் சாட்டுகிற அன்புக்குரிய அன்னை இந்திரா அம்மையார் அவர்களே; கேரளத்தில் கருணாகரன் தலைமையில் நடைபெறுகிற இந்திரா காங்கிரஸ் கூட்டணி ஆட்சி என்பது அந்த அணியில் இருக்கிற எல்லாக் கட்சிகளின் கொள்கைகளை யும் ஒன்றாகப் போட்டு வேக வைத்து வடித்தெடுத்த கஞ்சி வெள்ளமா?

கேரளாவில் எத்தனை கட்சிகள் கூட்டுச்சேர்ந்து அமைச்சரவையிலும் இடம் பெற்று; இந்திரா காங்கிரஸ் தலைமையில் ஆட்சி நடக்கிறது என்பதைத் தாங்கள்; தங்கள் வசதிக்காக மறந்து விடலாமா, தாயே?

அவ்வளவு தொலைவு போவானேன்? தமிழகத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில் தஞ்சையில் காங்கிரஸ் வேட்பாளரை நிறுத்தி வைத்துவிட்டு—அதற்குத் தமிழ் நாட்டில் உள்ள ஆளுங்கட்சியின் ஆதரவையும், ஆளுங் கட்சியின் தோழமைக் கட்சிகளாக உள்ள சுமார் பத்துப் பனிரெண்டு கட்சிகளின் ஆதரவையும் தேடிப் பெற்றீர் களே; அது எந்தக் கொள்கை அடிப்படையில் என்று விளக்குவீர்களா?

உடன்பிறப்பே: இந்த வினாக்களுக் கெல்லாம் விடை கிடைக்காது பிரதமரிடமிருந்து! காரணம், நமக்கு

விடை அளிக்கக் கூடாது என்பதல்ல! நமக்கு விடை அளிக்க முடியாது; அவ்வளவுதான்!

"டெல்லியில் ராமராவ் கொண்டு வந்து நடத்திய எம்.எல்.ஏ.க்கள் அணிவகுப்பில் மூன்றுபேர் மேலவை உறுப்பினர்கள்! அவர்களுக்கு முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது!"

பிரதமர் கண்டுபிடித்து வெளியிட்டுள்ள கணக்கு இது!

ஆந்திர சட்டசபையில் மொத்த உறுப்பினர் 295 பேர்!

அதில் 148 பேர்: யார் பக்கமிருந்தாலும், அவர்களுக்கே பெரும்பான்மையிருப்பதாக ஜனநாயகக் கணக்கு கூறுகிறது!

பிரதமர் சொல்வது போல ராமராவ் அழைத்து வந்த 162 பேரில் மூன்று பேரை மேலவை உறுப்பினர்கள் எனக் கூறிக் கழித்துவிட்டாலும் கூட; 159 பேர் ராமராவ் அவர்களை ஆதரிக்கும் போது அவர்தானே முதலமைச்சராக நீடிக்க வேண்டும்?

வாதத்திற்காகக் கேட்கிறேன்; ராமராவ், டெல்லிக்கு அழைத்து வந்த உறுப்பினர்களைப் பற்றி அவ்வளவு ஆராய்ச்சி செய்து ஒற்றர் மூலமாக மூவர் எம்.எல்.சிக்கள் எனக் கண்டுபிடிக்கப் பிரதமர் எடுத்துக் கொண்ட

அக்கறையை-பாஸ்கரராவ்; வெறும் எழுத்து மூலமே காட்டிய கணக்கை அவ்வளவு அவசரமாக ஏற்றுக் கொண்டு—ராமராவை "டிஸ்மிஸ்" செய்வதற்கு முன்பு எடுத்துக் கொண்டு யோசித்திருக்க வேண்டாமா?

இதையெல்லாம் வாதமாக்கினுல் ஒரே வரியில் அம்மையார் குற்றம் சாட்டிவிடுகிருர்கள்; எதிர்க்கட்சி களுக்குக் கொள்கையில்லையென்று!

உடன்பிறப்பே; உனக்காகக்கூட இந்தக்கடிதம் எழுதவில்லை! உலக அரங்கில் இந்தியாவின் ஜனநாயக நெறி கொடி கட்டிப் பறக்கிறது என எண்ணிக்கொண் டிருக்கும் இந்திரா காங்கிரசில் உள்ள நண்பர்களின் சிந்தனைக்காக இதனை எழுதினேன்!

அன்புள்ள,

மு. க.

'முரசொலி'
28-8-84

## ஜனநாயகம் காப்போம்!

**ஆந்திரத்தில் என். டி. ராமாராவ் ஆட்சி கலேக்கப் பட்டதைக் கண்டித்து 20-8-1984 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற அனைத்துக்கட்சித்தலைவர்கள் மாநாட்டில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை:**

முதன் முதலாக 1975 ஜூன் மாதம் நாட்டில் நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டதை கேள்வி யுற்றபோது எந்த உணர்வு எனக்கு ஏற்பட்டதோ அதே உணர்வுதான், திட்டவட்டமான பெரும்பான்மை பலம் பெற்றிருந்த என். டி. ராமராவ் அவர்களின் அமைச்சரவை டிஸ்மிஸ் செய்யப்பட்டது என்ற செய் தியைக் கேள்விப்பட்ட போதும் எனக்கு ஏற்பட்டது.

புதுவை, சிக்கிம், காஷ்மீரைத் தொடர்ந்து, இப் போது ஆந்திரப்பிரதேசத்திலும் இந்த வெட்கம் கெட்ட மோசடி நடந்துள்ளது.

ஆந்திரத்தில் மீண்டும் ஜனநாயகம் நிலைநாட்டப் பட வேண்டும்! இதுவே நாம் முதலாகவும் முற்றாகவும் விரும்புவது!

பால் இன்னும் சிதறிவிடவில்லை! வெள்ளம் இன்னும் தலைக்குமேல் போய்விடவில்லை! நடந்துவிட்ட தவறு களை நாம் இப்போதுகூடச் சரிசெய்து விடலாம்! ஆமாம்! நாம் யதார்த்த உணர்வுடன் செயல்பட வேண் டும்!

மத்திய அரசுக்கு நாம் முடிவாக—முற்றுக ஒரு வாய்ப்பு தருவோம்! குடியரசுத் தலைவர் முன் ஆந்திரச் சட்டமன்ற உறுப்பினர்களை அணிவகுக்கச் செய்திடு வோம்! தெலுங்கு தேசக் கட்சிக்கு உள்ள பெரும் பான்மையை நிருபித்திடுவோம்! ஆளுநர் ராம்லாலைப் பதவி நீக்கும்படி விண்ணப்பித்திடுவோம்!

ஆந்திரச் சட்டமன்றம் உடனே கூட்டப்படட்டும்! துரோகி பாஸ்கரராவுக்குப் பெரும்பான்மை கிடையாது என்பது மொத்த உலகம் அறிந்த விஷயம்! அவர் சட்டமன்றத்தில் பெரும்பான்மையைக் காட்ட முடியாது போனவுடன், ஆட்சி அமைக்கும்படி என். டி. ஆர். அவர்களை ஆளுநர் அழைக்க வேண்டும்.

ஆந்திரத்தில் நாம் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்க முடியாது! அங்கே குடியரசுத் தலைவர் ஆட்சி என்பதும் பாஸ்கரராவ் ஆட்சி என்பதும் ஒன்றுதான்!

என். டி. ஆர். அவர்கள் மீண்டும் ஆட்சியில் அமர வேண்டும்! அதுவே நமது விருப்பம்!

உருப்படியாக ஏதும் நடைபெருவிடின்—வெறும் கண்துடைப்பு வேலைகளே நடைபெறும் எனின்—நாம் செய்யப்போவது என்ன?

நடுவணரசு செயல்படாவிட்டால், அப்புறம் நாம் செயல்படுவோம்!

இந்தியாவை ஒரு சமஷ்டி நாடு என்று சொல்வது கூட ஒருபுறம் இருக்கட்டும்! இப்போதைய நிலை நீடித்தால் இதை இனி ஒரு ஜனநாயக நாடு என்றுகூடச் சொல்ல முடியாமல் போய்விடும்!

வருங்காலத்தில் நடக்கவிருக்கும் விபரீதங்களுக்கான நிகழ்ச்சிநிரலுக்கு இது ஒரு ஆரம்பமாகக்கூட இருக்கலாம். உதாரணமாக, ஜனநாயகத்துக்கு நிரந்தரமாகச் சமாதி கட்டுவதற்காக அரசியல் சட்டம் திருத்தப்படலாம். நாம் இது வரை அனுபவித்திராத அதிபர் ஆட்சிமுறைகூட புகுத்தப்படலாம்; அல்லது சிவில் நிர்வாகம் ராணுவத்தின் கையில்கூட ஒப்படைக்கப்படலாம். இதில் ஏதாவது ஒன்று நடக்கலாமென அஞ்சுகிறேன்.

எதிர்க்கட்சிகளாகிய நாம் நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பங்களில் மட்டும் கூடி, தீர்மானங்கள் நிறைவேற்றி, மகிழ்ச்சியுடன் கலைந்து செல்வதால் பயனேதுமில்லை. நாம் தீயணைப்புப் படையினராகச் செயல்பட்டு

வருகிறோம். அது போதாது. தீயே பிடிக்க முடியாத ஒரு முறையை நாம் உருவாக்க வேண்டாமா?

கடிகாரத்தில் ஊசலாடும் பெண்டுலம் மீண்டும் திரும்பி வந்தேயாகவேண்டும் என்பதுபோல், அதிகாரம் நமக்குத் தானுகவே நம் கைக்கு வந்துசேரும் என்று நாம் கனவு கண்டுகொண்டிருக்கக்கூடாது!

சந்தர்ப்பப் பொருத்தமற்றதென நீங்கள் கருதாமலிருப்பின், ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். எதிர்க்கட்சிகள் இப்போது ஒன்று படவில்லை எனில், அவை இனி என்றுமே ஒன்று படாமலே இருந்துவிடக்கூடும். இந்த நாட்டில் ஜனநாயகத்தைக் காக்க எதிர்க்கட்சிகள் தவறிவிட்டன என்று, நமது வருங்கால சந்ததியினரின் குற்றச்சாட்டுக்கு நாம் ஆளாக நேரிடும்.

தேசிய மாற்று அமைப்பு ஒன்றை மக்கள் விரும்புகின்றனர். அறிவாளிகளிடையிலும் சரி, பாமர மக்களிடையிலும் சரி, நாட்டில் அச்ச உணர்வு அலைமோதுகிறது. ஒரு சிறு பொறி கிளம்பினுல்கூடப் போதும் எதிர்ப்பு உணர்வு கொழுந்து விட்டு எரியத் தொடங்கிவிடும். யோசனை செய்து கொண்டிருப்பதற்கோ தயக்கத்திற்கோ அவகாசம் இல்லை.

தேர்தல்கள் நடத்தப்படுமானுல், வரும் தேர்தலில் இ. காங்கிரஸ் நேரடிப் போட்டிகளைச் சந்தித்தாக வேண்

டும்; அதற்கு நாம் யாரும் தடங்கலாகக் குறுக்கே நின்றுவிடக்கூடாது என்பதையாவது, இப்போதே—இங்கேயே—உறுதிப்படுத்திக்கொள்வோமாக. விவரங்களைப் பின்னர் பேசி முடிவு செய்துகொள்ளலாம். இந்தக் கூட்டத்தை நடத்திய பிறகு, இந்தச் செய்தியை நாம் மக்களுக்கு விடுவிக்கவில்லையெனில், நமது கடமையில் தவறியவர்களாகி விடுவோம். இப்போது தேவைப்படுவது, அட்டகாசமான சொற் ஜாலங்கள் அல்ல; நாட்டு மக்களின் உணர்வைத் தட்டி எழுப்பக்கூடிய செயல் திட்டந்தான். ஜனநாயக விரோதக் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக இம்மாதம் 25-ந் தேதி தமிழ் நாட்டில் மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் முன் எதிர்க்கட்சிகளாகிய நாங்கள் மறியல் நடத்த இருக்கிறோம். அன்று இரண்டு லட்சம் பேருக்கு மேல் சிறை புக முன்வருவார்களென எதிர்பார்க்கிறேன்.

ஆந்திரத்தில் ஜனநாயகத்தை மீண்டும் ஏற்படுத்த மத்திய அரசு மறுக்குமேயாகில், நாடு பூராவிலும் காந்திய வழியில் இத்தகைய கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ள நாம் திட்டமிட வேண்டும். அதற்கு எனது கட்சியின் சார்பில் ஒத்துழைப்பு நல்குவோம் என உறுதியளிக்கிறேன்.

★

தி.மு.க. அறக்கட்டளை பேராசிரியர் அன்பழகன் ஆய்வக நூலகம் சென்னை



தலைமைக் கழக வெளியீடு

அட்டைப்படம் அச்சிட்டோர்: தமிழோசை அச்சகம்
84, அபிபுல்லாசாலை, சென்னை-17